# சந்திரனுக்கு சமீபத்தில் ரஷ்ய விண்வெளி கலம்

Registered as a Newspaper in Ceylon ★ ✱ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 221
தேசிய தினசரி

[illegible] புரட்டாதி 3 ஆம் ... 25 வியாழக்கிழமை (19-9-68)

மாஸ்கோ, செப். 18
சோவியத் ரஷ்யாவின் ஸோன் என்ற விண்வெளிக் கலம் சந்திரனுக்கு மிக சமீபத்தில் நெருங்கிக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை ரஷ்யா அனுப்பிவைத்துள்ள இந்த விண்வெளிக்கலம் திரும்பவும் பூமியில் இறங்குமானால் வானவெளி ஆராய்ச்சியில் இது ஒரு புதிய சாதனையாக இருக்கும்.

ஸோன் என்ற இந்த விண்வெளிக்கலம் நூற்றுக்கணக்கான படங்களை அனுப்பிக்கொண்டிருக்கிறது. இந்த விண்வெளிக் கலம் வரும் வெள்ளிக்கிழமை பூமியில் இறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. விண்வெளிக்கலம் தனது பயணத்தில் வெற்றிபெற்றால், சந்திரனில் மனிதனை இறக்கலாம் என்பதற்கு வெற்றி கிடைத்தது போன்றதாகும் என்று சோவியத் வான வெளி ஆராய்ச்சியாளர் தெரிவிக்கின்றனர்.

## சிமெந்து தொழிற்சாலையில் தீவிபத்து

அளவெட்டி, புதன்
கடந்த இரவு காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் தீவிபத்து ஒன்று ஏற்பட்டது.

இத் தீவிபத்தால் சுமார் 5000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்குமென கருதப்படுகிறது.

தொழிற்சாலையின் கல்லே கரிக்கும் இடமான குவாறி

[8-ம் பக்கம் பார்க்க]

### நூற்றுக்கணக்கான மத்திய அரசாங்க ஊழியர் கைது

# டில்லியில் ஆர்ப்பாட்டம்: பொலிஸார் மீது கல்வீச்சு

## இன்று அடையாள வேலை நிறுத்தம்

புதுடில்லி, செப். 18

**உணர்ச்சிவசப்பட்ட நூற்றுக்கணக்கான மத்திய அரசாங்க ஊழியர் இன்று தலைநகரின் இரு இடங்களில் தடை உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் நடாத்தினர்.**

பொலிஸார் ஊழியரைக் கலைக்கமுனைந்தபோது, இரு பகுதியினரிடையேயும் பலத்த மோதல் ஏற்பட்டது. கட்டுமீறிய அரசாங்க ஊழியர் ஆத்திரமேலீட்டினால் பொலிஸார் மீது கல்வீச்சு நடாத்தினர்.

நூற்றுக்குமேற்பட்டோர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். தொழிலாளர் சங்கத்தலைவர் திரு. எஸ். எம். பானர்ஜியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

டில்லியில் மத்திய ஊழியர் கைதுசெய்யப்பட்டது குறித்து தொழிலாளர் சங்கத்தலைவர் திரு டாங்கே கண்டித்துள்ளார்.

இந்தியாவில், மத்திய அரசாங்க ஊழியர்களின் பொது வேலைநிறுத்தம் ஒன்று நாளை வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது.

நாட்டின் அத்தியாவசிய சேவைகள் தடைபெறுவதின்றி இயங்குவதற்கான ஆயத்தங்களை எல்லாம் இந்திய அரசாங்கம் முடித்துக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த உத்தேச வேலைநிறுத்தத்தை எதிர்பார்த்து, இந்திய உள்துறை மந்திரி திரு. சவான், அண்மையில் கடுமையான சட்டம் ஒன்றைப் பிறப்பித்திருந்தார்.

நாளை நடைபெறவிருக்கும் வேலைநிறுத்தம் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் என்றே கூறப்படுகிறது. ஆனால் அது தொடரப்படலாம் என்றும் சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வேலைநிறுத்தத்தின்போது நாட்டின் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்ட எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது. மற்றும் ராஜ்ய அரசுகளும் அவ்வாறே அறிவித்துள்ளன.

கேரள ராஜ்ய அரசாங்கம் மட்டும், இந்திய மத்திய அரசின் புதிய சட்டத்தின் சில கடுமையான விதிகளை அனுசரிப்பதில்லையென முடிவு செய்துள்ளது.

உத்தேச வேலை நிறுத்தம் பற்றி சுதந்திராக்கட்சித் தலைவர் ராஜாஜி கருத்து வெளியிடுகையில், 'இது தேசத்துரோக நடவடிக்கைக்கு எவ்வகையிலும் குறைந்ததல்ல' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் உத்தேச வேலை நிறுத்தத்தில் சேருவதில்லையெனப் பல தொழிற்சங்கங்கள் முடிவு செய்திருப்பதாக இந்திய வானொலி அறிவித்துள்ளது.

## தமிழ் காங்கிரஸ் தலைவர்கள் பிரதமரைச் சந்திப்பர்

கொழும்பு, புதன்
அரசாங்க ஊழியரின் சிங்களத்தேர்ச்சி நிபந்தனை, 701, 702ம் இலக்க திறைசேரியின் சுற்றறிக்கைகள், தமிழ்மொழியின் நிலை ஆகியவைகள் பற்றியும் இராமநாதன் பல்கலைக்கழகம் பற்றியும் தமிழ்காங்கிரஸ் தலைவர்கள் விரைவில் பிரதமரைச் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இராமநாதன் பல்கலைக்கழகம் அமைப்பதால் அரசாங்கம் பணம் செலுத்திவிடவேண்டிய அவசியம் ஏற்படாதென்றும் சேர் பொன். இராமநாதன், பழவராஜர் தரும சொத்துக்களை இதற்குப் பயன்படுத்தலாமென்றும் இராமநாதன், பரமேஸ்வராக் கல்லூரிக்கட்டிடங்களை பல்கலைக்கழகமாக்கலாமென்றும் தமிழ்காங்கிரஸ் தலைவர்கள் பிரதமருக்கு எடுத்துக்கூற விருப்பதுடன் வரவு-செலவுத் திட்டத்தில் இராமநாதன் பல்கலைக்கழகத்துக்கென அடையாள மாகவும் ஒதுக்கிவருவதில் அர்த்தமில்லையென்றும் அதைசெயல்படுத்த வேண்டுமெனவும் கேட்கவிருக்கின்றனர்.

# வதந்திகளுக்கு நல்லூர் எம்.பி. மறுப்பு

கொழும்பு, புதன்
அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்த செனட்டர் எம். திருச்செல்வத்தை மக்கள் பிரதிநிதிகள் சபைக்குத் தெரிவுசெய்யும் பொருட்டு தமிழ் அரசுக்கட்சிப் பிரதிநிதி ஒருவர் தமது ஸ்தானத்தை ராஜினாமாச் செய்வதற்கும் அதன்பின் நடைபெறும் உபதேர்தலில் செனட்டர் திருச்செல்வத்தைப் போட்டிக்கு நிறுத்தி தெரிவு செய்வதன் மூலம் தமிழரசுக் கட்சிக்கு மக்களிடம் நம்பிக்கையிருக்கிறதென்பதை அரசாங்கத்துக்கு உணர்த்தலாமென்றும் தமிழரசுக் கட்சியின் தலைமைப்பீடம் கருதுவதாக சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியைத் தமிழரசுக் கட்சித் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் இன்று மறுத்தார்.

எந்த எம். பி.யும் ராஜினாமாச் செய்து திரு. திருச்செல்வத்தை ஆட்சிமன்றத்துக்குத் தெரிவுசெய்வதன் மூலந்தான் தமிழரசுக்கட்சிக்கு மக்களின் நம்பிக்கை இருக்கிறதென்பதை எடுத்துக்காட்ட வேண்டிய அவசியமில்லையென்றும் மக்களின் நம்பிக்கையை தமிழரசு என்றும் பெற்றிருக்கிறதென்பதை நாடு நன்கறியு

(8-ம் பக்கம் பார்க்க)

### நிதிஅமைச்சர் இன்று லண்டன் போகிறார்

## சிங்கள தேர்ச்சி பற்றி புதுஉத்தரவு இன்னும் இல்லை

கொழும்பு, புதன்
அரசாங்க ஊழியரின் சிங்களத் தேர்ச்சி பற்றியோ இது சம்பந்தமான திறைசேரியின் 701-ம் 702-ம் இலக்கச்சுற்றறிக்கைகள் பற்றியோ, தமிழ்மொழிச்சட்ட விதிகளை அரசாங்க இலாகாக்களில் உபயோகிப்பது பற்றியோ நிதி அமைச்சரிடமிருந்து திறைசேரிக்கு புதிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்று திறைசேரி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயக்காவும் அரசாங்க நிரந்தரக் காரியதரிசி, திறைசேரிக் காரியதரிசி ஆகியோர் லண்டனில் நடைபெறவிருக்கும் காமன் வெல்த் நிதிமந்திரிகள் மகாநாட்டிலும் கலந்துகொள்வதற்காக நாளை புறப்படவிருப்பதால் இப்போதைக்கு இவை சம்பந்தமான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் சாத்தியமில்லையென்றும் அந்த அதிகாரி சொன்னார்.

சிங்களத் தேர்ச்சி நிபந்தனை, 701, 703-ம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைகள், அரசாங்க இலாகாக்களில் தமிழ்மொழி உபயோகச் சட்டவிதிகள் அமுல் ஆகியவை அரசாங்கக் கொள்கை சம்பந்தப்பட்ட விஷயமாதலால் நிதிஅமைச்சரிடமிருந்தே திறைசேரிக்கு உத்தரவு கிடைக்கவேண்டும்.

வரவு-செலவுத் திட்டம் அம்சம் அம்சமாக ஆட்சி

[8-ம் பக்கம் பார்க்க]

# அண்ணு உற்சாகமாக இருக்கிறர்

நியூயோர்க், செப். 18
தமிழக முதலமைச்சர் அண்ணுதுரையின் உடல்நிலை மிகவும் திருப்திகரமாக தேறிவருவதாகவும், அவர் உற்சாகமாக இருப்பதாகவும் நியூயோர்க் மெமோரியல் ஆஸ்பத்திரியிலிருந்து கிடைத்தசெய்திகள் தெரிவிக்கின்றன.

திங்கட்கிழமை அண்ணுவுக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டு அவரின் உணவுக் குழாயிலிருந்து மூன்று அங்குலக்கட்டியொன்று அகற்றப்பட்டது தெரிந்ததே.

இரத்த அழுத்தம், நாடி, உடற்சூடு ஆகியன மிகவும் சரியாக இயங்குவதாகவும் ஆஸ்பத்திரியிலிருந்து கிடைத்த அறிக்கை தெரிவிக்கிறது.

அண்ணுவை இன்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் இன்று போய்ப் பார்த்தார். ஐ. நா. விலுள்ள இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதியும் அண்ணுவைப் போய்ப்பார்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே. ஜெர்மனி மீதான கம்யூனிஸ்ட் இராணுவ தாக்குதல் எதுவும் முறியடிக்கப்படும்

## ரஷ்யாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

வாஷிங்டன், செப்டம்பர் 18

மேற்கு ஜெர்மனி மீது நடத்தப்படும் எந்தக் கம்யூனிஸ்ட் இராணுவத் தாக்குதலும், வட அத்லாந்திக் ஒப்பந்த நாடுகளால் முறியடிக்கப்படும் என்று அமெரிக்கா, ரஷ்யாவிடம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வாஷிங்டனிலுள்ள அமெரிக்க ராஜாங்க இலாகாவிலிருந்து இச்செய்தி கிடைத்துள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு. க்ளார்க் கிளிபோர்ட், ஐரோப்பாவில், செக்கோஸ்லவாக்கியாவில் வார்ஸோ துருப்புகளின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமை பற்றிக் குறிப்பிடுகையில், அண்மையில் ஐரோப்பாவிலிருந்து திருப்பியழைக்கப்பட்ட அமெரிக்கத் துருப்புகளில் 12,000 போர்வீரர் உத்தேசித்த காலத்துக்கு முன்னதாகவே, அங்கு நடைபெறவிருக்கும் வட அத்லாந்திக் ஒப்பந்தப் படைப்பயிற்சிகளில் கலந்துகொள்ளத் திரும்பிச் செல்வார்கள் என அறிவித்துள்ளார்.

ஆனால், ஐரோப்பாவில் நிரந்தரமாக அமெரிக்க இராணுவத்தை வைத்திருக்கும் நோக்கம் அமெரிக்காவுக்கு கிடையாது என்று திரு. கிளிபோர்ட் கூறினார்.

## இலங்கை நிதி அதிகாரி லண்டனில் பயில்வார்

லண்டன், செப். 18

இலங்கை உட்பட சமராஜ்ய நாடுகளைச் சேர்ந்த சிரேஷ்ட நிதி அதிகாரிகள் அடுத்தவாரம் லண்டனில் ஆரம்பமாகவிருக்கும் மூன்றுமாதப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்வார்கள். அரசாங்க கணக்கியல், கணக்காய்வியல் போன்ற துறைகளில் நடைபெறவிருக்கும் இந்தப் பயிற்சி வகுப்புகள் செப்டம்பர் மாதம் 23-ந் திகதி ஆரம்பமாகிறது.

இலங்கை அரசாங்க திறைசேரியில் நிதி விவகார உதவி அதிகாரியாகக் கடமையாற்றும் திரு. டி. சந்திரராசா இலங்கைப் பிரதிநிதியாக இந்தப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றுவார். கொழும்புத் திட்டத்தின் ஆதரவின் கீழ் இந்தப் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

இந்தப் பயிற்சி வகுப்புகள் லண்டனில் நடைபெறும். சுமார் 40 பிரிட்டிஷ் நிதிநிபுணர்கள் பங்குகொண்டு விரிவுரைகள் நிகழ்த்துவார்கள். 'அபிவிருத்தி நிதி, சிவில் சேவையாளரின் பங்கு' மின்கணித உலகம்' போன்ற விடயங்களிலிருந்து கணக்கியல் பல்வேறு அம்சங்கள் வரை விரிவுரைகள் இப்பயிற்சி வகுப்புக்களின் போது இடம்பெறும்.

சர்வகலாசாலை நகரமான கேம்பிரிட்ஜ் மற்றும் லண்டனிலுள்ள கம்பனிகள் பிரபல தொழில் நிறுவனங்களுக்கும் இந்த நிதி அதிகாரிகள் விஜயம் செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. சற்றில் பிரிட்டிஷ் கவுன்சில் ஒழுங்கு செய்துள்ள விருந்துபசாரத்துடன் இந்தப் பயிற்சி வகுப்புகள் முடிவடையும்.

## ஐ. நா. விமானத்தை எமது துருப்புகள் சுடவில்லை

### சமஷ்டி நைஜீரியா மறுப்பு

லாகோஸ், செப். 18

ஐ. நா ஹெலிகொப்டர் விமானமொன்றைச் சமஷ்டித் துருப்புகள் சுட்டு வீழ்த்தின என்ற செய்தியைச் சமஷ்டி நைஜீரிய அரசாங்கம் மறுத்துள்ளது.

பிரிவினை பியாவிராவுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது இரண்டு ஐ நா ஹெலிகொப்டர் விமானங்களில் ஒன்றைச் சமஷ்டி நைஜீரியத் துருப்புகள் இரு தினங்களுக்கு முன் சுட்டு வீழ்த்தியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இச் செய்தியை மறுத்துள்ள சமஷ்டி நைஜீரிய அரசாங்கம் சம்பந்தப்பட்ட ஐ. நா. விமானம் திசை திருப்பப்பட்டு குடி அமைந்த இடமே விழுந்து விட்டதாகத் தெரிவித்துள்ளது.

## இந்தியாவில் 15,000 சோவியத் டிராக்டர்கள்

மாஸ்கோ, செப். 18

இப்பொழுது இந்தியாவிலேயே 15,000 சோவியத் உழவுயந்திரங்கள் இயங்குகின்றன. இது இந்தியாவிலுள்ள உழவு இயந்திரங்களின் மொத்த தொகையில் மூன்றில் ஒரு பகுதியாகும்.

விரைவில் மேலும் 4500 உழவுயந்திரங்கள் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்படும். இந்தியாவுக்கு சொந்தமான 10 விவசாயத் தோட்டங்களுக்கு அவசியமான யந்திரங்களையும் சோவியத் நாடு கொடுத்துதவும்.

## புளியங்காய் ஆசை மரணத்தில் முடிந்தது

யாழ்ப்பாணம் வியாழன்

புளியமரத்தில் புளியங்காய் பிடுங்க ஏறிய சிறுவன் நிலத்தில் விழுந்து மரணமானார். இப் பரிதாப சம்பவம் ஊர்காவற்றுறை - புளியங்கூடல் பகுதியில் நடைபெற்றது.

அண்ணன் புளியமரத்தில் ஏறி புளியங்காய் பிடுங்குவதற்கு முன்னர், தான் ஏறி பிடுங்கவேண்டுமென்ற அவசரத்தில் முருகேசு மோகன் (11வயது) என்ற சிறுவன் மரத்தில் ஏறியபோது கை தவறி நிலத்தில் வீழ்ந்து மரணமானாராம். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினார்.

இறந்த சிறுவன் படுகாயங்களுடன் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானதாக மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது. விபத்து மரணமென மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். (ஈ. நி.)

## காந்தி நிலைய ஆண்டு விழா

உருத்திரபுரம், புதன்

உருத்திரபுரம் 8-ம் வாய்க்காலில் உள்ள காந்தி நிலைய குருகுலத்தின் 10-வது வருட பூர்த்திவிழா வரும் சனிக்கிழமை மேற்படி நிலையத்தில் நடைபெறும். முதலியார் செ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் உட்பட பலர் கலந்துரையாற்றவிருக்கின்றனர்கள்.

## இந்தியப் பிரதமரின் லத்தீன் அமெரிக்க பிரயாணத் திட்டம்

புதுடில்லி, செப். 18

இம்மாதம் பிற்பகுதியில் லத்தீன் அமெரிக்க மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்யவிருக்கும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் பிரயாணத் திட்டம் வெளியிடப்பட்டுள்ளது.

திருமதி இந்திரா இம்மாதம் 28-ம் திகதியன்று பிரேஸில் நாட்டு போய்ச் சேருவார். அங்கிருந்து அவர் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்குச் செல்வார். லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்து ஒக்டோபர் மாதம் 11-ம் திகதி அவர் டிரினிடாட் டொபாகோ வந்துசேருவார். அங்கிருந்து அடுத்தநாள் அவர் கயானா செல்வார்.

## 4 வீடுகள் தீக்கிரை

உடுப்பிட்டி, புதன்

கரணவாய் வடக்கு, நவிண்டில் என்னுமிடத்தில் இரு வீடுகள் தீக்கிரையாயின. புகோவிலிலும் இரு வீடுகள் தீப்பற்றியதாக எரிந்து சாம்பராகின. இது சம்பந்தமாக பொலிஸார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

## நெல்லியடி ப. சபை ஏற்பாடு

உடுப்பிட்டி, புதன்

நெல்லியடி பட்டினசபைப் பொதுநூல் நிலையத்தில் கருத்தரங்கு நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதம் கடைசிப் போயா தினங்களில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கிற்கான ஒழுங்குகளை நூலகப் பொறுப்பாளர் திரு. இ. கணேசானந்தன் மேற்கொண்டுள்ளார். இப்படியான கருத்தரங்குகளை நடாத்துவதன்மூலம் மாணவர்களும், பொதுமக்களும் அதிக பயனடைவர் எனநம்பப்படுகிறது.

## 6பேர் படுகாயம்

இரத்தினபுரி, புதன்

இங்குள்ள தோட்டமொன்றில் பொலிசாருக்கும் தொழிலாளருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பொன்றில் 6பேர் படுகாயமடைந்தனர். இதில் இரு பொலிசாரும், இரு பெண்களும் காயமடைந்துள்ளனர்

இது சம்பந்தமாக இறக்குவானை பொலிசார் ஐவரை சந்தேகத்தில் கைது செய்தனர். இக்கைகலப்பைத் தடுக்க பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

## செனட்டரின் தந்தை விபத்தில் மரணம்

அம்பலப்பிட்டி, புதன்

செனட்டர் பி. ஏ. ஜினதாசவின் தந்தை பி. ஏ. மெண்டிஸ் (வயது 65) விபத்தொன்றில் சிக்கி காலமானார். விபத்தில் சிக்கிய மற்றொருவரான நுகேகொடையைச் சேர்ந்த பி. பி. மகாநாயக்க என்பவர் ஆபத்திலிருந்து தப்பிவிட்டதாகவும் தெரிகிறது.

## நூல் நிலையப் பொறுப்பாளர்

உடுவில், புதன்

சுன்னாகம் பட்டின சபையின் ஆதரவில் இயங்கிவரும் பொதுஜன நூல்நிலையத்திற்கு பொறுப்பாளராக ஒரு பெண் ஊழியர் வரவிருக்கிறார்.

குருநாகல் மாநகர சபை நூல்நிலைய பொறுப்பாளராயிருந்த செல்வி எம். ஜெயலக்ஷ்மி அக்டோபர் மாதத்திலிருந்து சுன்னாகம் நூல் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் நூல் நிலைய பொறுப்பதிகாரியான திரு. பி. சிவலிங்கம் பதவி உயர்வுடன் மன்னார் பட்டின சபைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## செக். கம். தலைவர் டுப்ஜெக் மீண்டும் மாஸ்கோ செல்வார்

### உள்நாட்டு வர்த்தக மந்திரி பதவி நீக்கம்

பிராக், செப். 18

செக்கோஸ்லவாக்கியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான திரு. டுப்செக், ரஷ்யத் தலைவர்களுடன் பேசுவதற்காக மீண்டும் இவ்வார இறுதியில் மாஸ்கோ செல்லவிருப்பதாகப் பிராக் செய்திகள் தெரிவிக்கின்றன.

செக். கம்யூனிஸ்கட்சியின் கூட்டத்தில், ரஷ்யாவுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டுமென்று எடுக்கப்பட்ட முடிவுக்கிணங்கவே திரு. டுப்ஜெக் மாஸ்கோ செல்லவிருக்கிறார் என்று தெரியவருகிறது.

திரு. டுப்ஜெக்குடன், ஸ்லோவாக் கட்சித் தலைவரும், ரஷ்யர்களின் அபிமானத்துக்குரியவருமான டாக்டர் ஹுஸாக்கும் செல்வார் எனக் கூறப்படுகிறது.

#### மந்திரி பதவி நீக்கம்

இதற்கிடையில், செக். உள்நாட்டு வர்த்தக மந்திரி அவரது பதவியினின்றும் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யத் துருப்புகள் செக். நாட்டினுள் புகுந்த நாள் தொடக்கம் இதுவரை காலமும் இவர், தமது பதவி நிலையத்துக்குச் சமுகமளிக்கவில்லையெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

#### உலகப்போட்டிகள் நடைபெறு

செக். நாட்டிலுள்ள தற்போதைய நிலைமையை முன்னிட்டு, அடுத்த வருடம் பிராக்கில் நடைபெறவிருந்த உலக பனிக்கட்டிச் சறுக்கு ஹொக்கி போட்டிகள் அங்கு நடைபெறாது எனச் செக். அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

## பிறநாடுகளில் ஜேர்மன்மொழி ஆசிரியர்கள்

பேர்லின் செப். 18

ஜெர்மன் ஜனநாயக குடியரசைச் சேர்ந்த ஆசிரியர்கள் 25 நாடுகளில் 55 பல்கலைக் கழகங்களிலும் மொழிப் பாடசாலைகளிலும் ஜேர்மன்மொழி போதிக்கின்றனர்.

வெளிநாட்டுச் சேவைக்கு குழுவாக மேலும் 25 ஜேர்மன் மொழி ஆசிரியர்களை இப்பொழுது நியமித்துள்ளது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலேயே இந்த ஆசிரியர்கள் பணியாற்றுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கண்டிப்பான பிரம்ம சரியத்தால், தெய்வத்துடன் உள்ளம் லயித்து உண்மையான இன்பம் நுகரலாகும். சுயநலமற்ற அன்பு வாழ்க்கை வாழ்ந்து, மக்களுக்குச் சேவைசெய்யவும் பிரம்மச்சாரியம் உதவுகின்றது.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone 389.

[illegible] கீலக ஆண்டு
புரட்டாசி மாதம் 3-ந் திகதி
(19-9-68)

## வரட்சியை நீக்கவழி என்ன?

கடும்வரட்சி காரணமாகப் பரந்தன் ரசாயனத் தொழிற்சாலைக்குத் தேவையான தண்ணீர் கிடைக்காததால் அத் தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ள அவலநிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு தொழிற்சாலை அதிகாரிகளின் கவனக்குறைவுதான் காரணமென்று கூறப்பட்டாலும் வருடாவருடம் வரட்சி ஏற்படுவதும் அதனால் மக்கள் பெரும் தொல்லைகளுக்குள்ளாவதும் சகஜமாகிவிட்டது. இதற்கு இயற்கையின் சீற்றம் காரணமாக இருந்தாலும் மனிதனால் நிறைவேற்றக்கூடிய சாதனைகள் நிறைய உண்டு என்பதை மேல்நாடுகள் நிரூபித்திருப்பதால் நமது நாடும் இந்த வழிகளை ஓரளவாவது பின்பற்ற முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

வடபகுதியில் மட்டுமல்லாது நாட்டின் பலபகுதிகளிலும் கடும்வரட்சி நிலவுகிறது. மக்களும் கால்நடைகளும் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளனர். வடக்கு, வடமத்திய மாகாணங்களில் பயிர்கள் கருகிவிட்டன; நிலங்கள் வெடித்துள்ளன; குளங்கள் வற்றியுள்ளன. மகாவலி கங்கை மற்றும் கங்கைகளும் பெருக்கெடுத்த நேரத்திலும் மற்றும் நேரங்களிலும் கடலில் போய் வீணாகிவிடுகின்றன. மகாவலிகங்கையை வடக்கே திருப்பி, இங்கு புதிய குளங்களையும் கால்வாய்களையும் வெட்டுவிப்பதுடன் தூர்ந்துபோன குளங்களையும் சீர்திருத்தி ஆழமாக்கியிருந்தால் கங்கை நீரை அவை தேக்கி வைத்து இந்த வரட்சிக் காலத்தில் பயன்தந்திருக்கும். மகாவலி கங்கையைத் திருப்பும் திட்டத்தை இனியும் தாமதப்படுத்தாமல் விரைவில் செயல்படுத்த வேண்டிய அவசியத்தையும் இந்தக் கடும்வரட்சி உணர்த்துகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள கிணறுகளில் இந்த வரட்சிக் காலத்திலும் ஓரளவு நீர் கிடைப்பதாக இருந்தாலும் அவையும் அருந்த முடியாத, தாகத்தைத் தீர்க்க முடியாத உவர் நீராக, உப்பு நீராக இருக்கிறது. இதே சமயம் புங்குடுதீவு, நெடுந்தீவு போன்ற தீவுப்பகுதிகளில் குடிப்பதற்கே தண்ணீர் இல்லாமல் மக்கள் பெரும் கஷ்டப்படுகின்றனர். தினசரி ஆயிரக்கணக்கான கலன் தண்ணீர் அப்பகுதி மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. பங்கீட்டு முறையில் அப்பகுதி மக்கள் தண்ணீர் பெற வேண்டியுள்ளனர். தீவுப் பகுதி மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்னை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பல ஆண்டு காலமாக இதே நிலை தானிருந்து வருகிறது. இதற்கு ‘‘ஆவன செய்வோம்’’ என்று ஒவ்வொரு அரசாங்கமும், இங்கு விஜயம் செய்யும் அமைச்சர்களும் கூறி வருகின்றனரேயொழிய இதுவரை உருப்படியாக எதுவும் செய்ததாக இல்லை. ஆட்சி மன்றத்திலும் தீவுப்பகுதி பிரதிநிதிகள் பல தடவை எடுத்துச் சொல்லி களைத்துவிட்டனர்.

கடல் நீரை நன்னீராக்கி குடிநீராக உபயோகிக்கும் முறையை மேல்நாடுகள் பல வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளன. எது எதெற்கெல்லாமோ வெளிநாட்டு உதவிகளையும், வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளையும் பெறும் நாம், மக்கள் உயிர் வாழ்வதற்கு கடல் நீரை, நன்னீராக்கி, குடிதண்ணீராக உபயோகிப்பதற்கு வழிவகை காண வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளையும் உதவியையும் பெறக்கூடாதா?

# ‘கலந்தாலோசிக்க வேண்டிய விஷயமாகக் கருதவில்லை’

— செனட்டர் திருச்செல்வம்

# என்னைக் கலந்திருந்தால் இந்தநிலைமை ஏற்பட்டிருக்காது

— பிரதமர்

கோணேசர் ஆலயம் இருக்கும் பகுதியைப் புனித நகராகப் பிரகடனப்படுத்துவது குறித்து ஆராய்வதற்குக் குழு ஒன்றை நியமிக்கு முன் பிரதமருடன் கலந்தாலோசிக்கவேண்டிய விஷயம் என்று தாம் அதைக் கருதவில்லை என்று முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் திரு. திருச்செல்வம் தெரிவித்த கருத்தை மறுதலித்த பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்கா செனட்டர் திருச்செல்வத்துக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

செனட்டர் திருச்செல்வமும், பிரதமமந்திரியும் பரஸ்பரம் எழுதிக்கொண்ட இரு கடிதங்களின் முழு விபரங்களும் இங்கு தரப்படுகின்றன.

செனட்டர் திருச்செல்வம் இம்மாதம் 12-ம் திகதி பிரதம மந்திரிக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

தாங்கள் இரண்டாம் திகதி எழுதிய கடிதத்தையும் ‘டெய்லிநியூஸ்’ பத்திரிகையில் வெளியான அறிக்கையையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தவிஷயம் தங்களுடன் கலந்தாலோசிக்க வேண்டியதொன்று என நான் கருதவில்லை.

திருகோணமலை பிரடரிக் கோட்டையிலுள்ள கோணேஸ்வரம் ஆலயத்தைச் சுற்றியுள்ள பகுதியை புனித நகராகப் பிரகடனப் படுத்துவது குறித்து ஆராயவென ஒரு குழுவை நியமிப்பது சம்பந்தமாக எனது எண்ணத்தை இவ் வருடம் ஜனவரி மாதம் 18-ம் திகதி திரு. ஆர். பிரேமதாசாவிடம் தெரிவித்தேன். இந்த விஷயம் அரசியல் சர்ச்சைக்கு உள்ளாகும் என்று நான் அப்பொழுது நினைக்கவில்லை. இது அரசியல் ரீதியில் உகந்ததல்லவென்று கருதியிருந்தால் திரு. பிரேமதாசா என்னிடம் தெரிவித்திருப்பார். பிரடரிக் கோட்டையின் முழுப் பகுதியையும் புனித நகராக்குவது என் நோக்கமல்ல. அது சம்பந்தமாக சிபாரிசுகள் செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவுக்கு அதிகாரமுமில்லை.

### இந்துக்களின் விருப்பம்

கோணேஸ்வரத்தைப் புனிதநகராகப் பிரகடனப் படுத்தும்படி இந்து சமயத்தவர்கள் பல காலமாகப் போராடி வருகிறார்கள். கதிர்காமம், களனிய, மகியங்கனை போன்ற இடங்கள் புனித நகராக்கப் பட்டிருப்பதை அவர்கள் எனக்கு சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இது விஷயமாக ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற முறையில் நான் அரசியல் நெருக்கடிக்குள்ளாகியிருந்தேன்.

சுப்ரீம் கோர்ட்டின் முன்னாள் நீதியரசர் ஒருவரையும் ஓய்வுபெற்ற இரு மாவட்ட நீதிபதிகளையும் கொண்டு குழுவொன்று இதுபற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டது. புதிதாக ஒரு குழு நியமித்தால் இந்த மூன்று கனவான்களையும் அது தவறாகப் பிரதிபலிக்கும். என்னையும் எக்கச்சக்கமான ஒரு நிலைக்கு தள்ளியிருக்கும்.

இந்துக்கள் ஒருமனதாக கோணேஸ்வராலய விஷயத்தில் அக்கறை கொண்டிருக்கிறார்கள். கி. பி. 5-ம் நூற்றாண்டுக்குப்பின் இந்துக்களின் வழிபாட்டுத் தலமாக இருந்து வரும் இந்த கோணேஸ்வராலயத்தை புனிதநகராக்கக் கூடாது என்று வண. மங்கல தம்மசிறி சுமேதா நாயக்கா தேரோ கூறுவதற்காக அரசாங்கம் மாற்றாந்தாயின் முறையில் நடத்தி கொள்வதை இந்துக்கள் எதிர்பார்க்க [illegible] பொருத்தமற்ற சமயத்தில் வெளியாகியுள்ளது [illegible]

### பிரதமர் பதில்

பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா செனட்டர் திருச்செல்வத்துக்கு இம் மாதம் 15-ம் திகதி எழுதிய கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

உங்களின் கடிதம் கிடைத்தது. என்னுடன் கலந்தாலோசிக்க வேண்டிய விஷயமாக இதை நீங்கள் கருதவில்லை என்ற உங்கள் கருத்து குறித்தும் உங்கள் பார்லிமென்ட் காரியதரிசியான திரு பிரேமதாசாவிடம் பிரடரிக் கோட்டைப் பகுதியை புனித நகராக்குவது சம்பந்தமாக எந்த நிர்ணயம் செய்வதற்கு குழு நியமிப்பது குறித்து கருத்தை தெரிவித்து அரசியல் அல்லது வேறு அபிப்பிராய பேதங்களை எதிர்பார்த்துடன் நீங்கள் திருப்தியடைந்துள்ளது பற்றியும் நான் ஆச்சரியமடைகின்றேன். உங்கள் கருத்தை நான் ஏற்கவில்லையென்றும் உங்களுக்கு தெரியாத பல பகுதிகளை பற்றி கவனிக்க வேண்டிய ஒரு விஷயத்தில் அதன் முழுதாற்பரியங்கள் பற்றியும் தீர்மானிக்கக்கூடிய நிலையில் தாங்கள் இல்லையென்றும் திட்டவட்டமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலில் பிரடரிக் கோட்டை ராணுவத்தின் கீழ் இருப்பது உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். இந்த ஆண்டின் ஆரம்பம்வரை அது [illegible] ஆட்சியாளரின் கீழ் வரவில்லை. இதற்கு சரியான சில காரணங்கள் இருந்திருக்குமென்று நீங்கள் அறிவீர்களென்று நான் நினைக்கிறேன். இது ராணுவத்தின் அதிகாரத்திலிருப்பதனால் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் கீழ் வருகிறது. இந்த நிலைமையில் அதனை வேறு விஷயத்துக்கு பயன் படுத்துவதற்கு நடவடிக்கை ஏதும் எடுப்பதற்கு முன்னதாக இல்லாவிட்டாலும் [illegible] என்னுடன் மந்திரி என்ற முறையில் கலந்திருக்க வேண்டும். இந்த மரியாதை எந்தஒரு மந்திரிக்கும் உரியது என்பதோடு பிரதமமந்திரி என்றவகையில் ஒத்த நிலைமையிலும் நான் கலந்தாலோசிக்கப்பட வேண்டுமென்பதையும் குறிப்பாக பல சமயத்தவர்களுக்கிடையிலான தொடர்பை மட்டுமன்றி நாட்டின் பாதுகாப்பே சம்பந்தப்பட்டுள்ள விஷயத்தில் நான் கலந்தாலோசிக்கப்பட வேண்டுமென்பதை தாங்கள் உணர்வீர்கள் என்று கருதுகிறேன்.

### பேச்சுவார்த்தை

[illegible] மலையில் இராணுவத்தின் கீழ் இருந்த ஒரு காணி சம்பந்தமாக அதிக முக்கியத்துவம் இல்லாத ஒரு பிரச்னைகுறித்து நடவடிக்கை எடுக்கப்படு முன் இந்த வருடம் முற்பகுதியில் நமக்குள் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ராணுவத்தின் கீழ் பிரடரிக் கோட்டைப் பகுதியிலிருந்த மைதானம் பட்டின சபையின் கீழ் கொண்டுவரப்பட்டதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். பிரடரிக் கோட்டைக்குள் புனித நகர் ஒன்று சிருஷ்டிப்பதற்கான ஆலோசனை செய்வதற்காக குழு நியமிக்கு முன் மிக முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்னை குறித்து என்னைக் கலந்திருக்க வேண்டியது அவசியம் என்பதை நீங்கள் நிச்சயமாக உணர்வீர்கள்.

ஸ்ரீகோணேஸ்வரம் ஆலய சம்பந்தமாக இந்துக்களுக்குள்ள ஆர்வம் எனக்குத் தெரியும் ஆதலால் தான் இந்துக்கள் இடைஞ்சலின்றி வழிபடக் கூடியதாக அருள் மலையில் நிரந்தரமாக நிறுத்தப்பட்டிருந்த ராணுவ காவல் முகாமை அகற்றினேன். பலகாலமாக இந்தக் கடைகள் இருந்துவந்துள்ள நான்தான் இங்கு கூடிய வசதிகளை ஏற்படுத்தினேன் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன், உண்மையில் சில தினங்களுக்கு முன் தான் கோணேஸ்வராலய முகாமையாளர்கள் அருள்மலையிலுள்ள விகிதத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை சுத்திகரிக்க எனது அனுமதியைப் பெற்றார்கள். இந்த நடவடிக்கைகள் குறித்து இந்துக்கள் பாராட்டியுள்ளார்கள் என்பது எனக்குத் தெரியும்.

பிறமதத்தவர்கள் எவராவதும் தங்கள் அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தங்கள் மதக் கடமைகளை செய்வதில் நான் பெரிதும் அக்கறையும் மரியாதையும் செலுத்தி வந்துள்ளேன் என்பதையும் மேலும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவைகளை ஆதரித்து பாதுகாப்பளிப்பது மட்டுமல்ல என்னால் முடிந்த எல்லா உதவிகளையும் இவர்களுக்குச் செய்வேன். இது இவ்வாறிருக்க, இந்த நாட்டின் பிரதமர் என்றவகையில் இந்த நாட்டின் பாதுகாப்பைக் குலைக்கக்கூடிய அவசரமுடிவுக்கு ஆதரவளிக்கவும் என்னால் முடியாது.

என்னுடைய அதிகாரத்தின் கீழுள்ள பகுதிக்குள் எந்தரூபத்தில் வந்தாலும் குறுக்கீடுகளையும் என்னால் அனுமதிக்கமுடியாது. என்னைப் பொறுத்தவரை முழு திருகோணமலைப் பகுதிபற்றி குறிப்பாக பிரடரிக்கோட்டைப் பகுதி பற்றி முடிவுகள் எடுக்கும்போது மிக முக்கிய பல பிரச்னைகள் கவனிக்கப்படவேண்டியிருக்கின்றன. இக்காரணத்தினால்தான் திருகோணமலை துறைமுகத்தை தேசியமயமாக்கிய போது கடற்படையினர் அங்கு இருக்க வேண்டுமெனக் கருதிக் கடற்படைத் தளபதியர் அட்மிரல் கதிர்காமரை துறைமுகக்கட்டுப்பாடான அதிகாரியாக நியமித்தேன்.

மிக முக்கியமான மற்ற காரணங்களை நீங்கள் அறிந்திருந்தால் என்னுடன் முன்கூட்டியே கலக்காமல் குழுவொன்றை நியமித்திருக்கமாட்டீர்கள். அதனால் சம்பந்தப்பட்ட குழுவைத் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளாதிருந்து தடைசெய்யும்படி நான் 2-ம் திகதி உங்களுக்கு எழுதிய கடிதத்தின் முக்கியத்துவத்தை நீங்கள் இப்பொழுது உணர்வீர்களென்று நினைக்கிறேன். நியமிக்கப்படும் எந்த குழுவுக்கும் விஷயத்தின் முக்கியத்துவமும் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்களையும் அறிந்திருக்கவேண்டும். கதிர்காமம், கெளனியா, மகியங்கனை போன்ற இடங்களை புனித நகராக்கியதுடன் பிரடரிக்கோட்டை விஷயத்தையும் ஒப்பிடுகையில் சூழ்நிலையிலுள்ள வேறுபாடுகளின் முக்கியத்துவத்தைக் காணவேண்டும். நீங்கள் அரசியல் நெருக்கடிக்குள்ளாகியிருப்பது பற்றிக் குறிப்பிட்டுள்ளதைக் கவனித்தேன். அது எனக்கு விளங்குகின்றது. ஆனால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் அரசியல் நெருக்குதலுக்கு இடமளிப்பது நாட்டின் எதிர்காலத்தையே குலைப்பதாகும். நாட்டின் தலைமை முக்கியத்துவமா[illegible]

## அவர்கள் பார்வை

# மாவ[illegible]

# பெரிய [illegible]

## ‘ஜன [illegible]

‘லங்கா தீப’ தனது 16-ம் திகதிய ஆசிரியர் வசனத்தில் இப்படி எழுதுகிறது:

‘‘கடந்த மூன்று ஆண்டுகளாக எதிர்க்கட்சியினர் சமஷ்டிக்கட்சியினரை அரசாங்கத்திலிருந்து வெளியேற்ற முயற்சி செய்து வந்திருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் சந்தோஷப்படுவதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஆனால் தேசிய ஐக்கியத்தினால்தான் நாட்டை வளர்க்கமுடியும் என்ற கருத்தை கொண்டவராய் பிரதமர் எப்பொழுதும் இருந்துவந்துள்ளார். கடந்த மூன்று ஆண்டுகளில் அப்படியான ஒற்றுமைக்கான நல்ல அறிகுறிகள் தென்பட்டு வந்துள்ளன. தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு கோட்டையிலுள்ள கோணேசர் இந்து ஆலயப்பகுதியைப் புனித நகராகப் பிரகடனப்படுத்தும் விஷயம் தான் காரணம் என்று கூறப்பட்டாலும் மாவட்ட சபை மசோதா தான் உண்மையான காரணம். ஒரு கருத்தை வினவு எதுவாகிலும் நி[illegible] நாட்டுவதில் சக்திவாய்ந்தவராய் இருக்கும் பிரதம மந்திரியை நாம் பாராட்ட வேண்டும். உள்ளூராட்சி அமைச்சர் சமஷ்டிக் கட்சி அங்கத்தவராய் இருந்ததின் காரணமாக அந்த அமைச்சில் ஏற்பட்டுவந்த குறைகளை எதிர்க்கட்சியினர் எப்பொழுதுமே சுட்டிக்காட்டி வந்திருக்கிறார்கள். அடுத்த இரண்டு ஆண்டுகளில் இக்குறைகளை நிவர்த்தி செய்துவிடலாம். வெளியேறுவதற்கு சமஷ்டிக்கட்சியினர் செய்தமுடிவு மாற்ற[illegible] என்று கூட நாம் கூறலாம். ஆனால், காலியான இடத்துக்கு தகுதியான ஒருவரைக்கொண்டு நிரப்பப்படும் என்றும் அடுத்த இர[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2-வது உலகப் போரின்போது கடலில் ஆழ்ந்த 'மிதக்கும் துறைமுகம்' மீட்கப்பட்டது

### 48வது முயற்சி

திருக்கோணமலை, புதன்

''மிதக்கும் துறைமுகம்'' மீட்கப்பட்டது. இம் மிதக்கும் துறைமுகம் இரண்டாவது உலக யுத்தத்தின் போது திருக்கோணமலையில் ஜப்பானியரால் வீசப்பட்ட குண்டுத் தாக்குதலின் காரணமாகக் கடலினுள் அமிழ்ந்து கிடந்தது. இந்தச் செயற்கைத்துறைமுகம் 1000 அடி நீளமும், 175 அடி அகலமுமுடையதாகும். இதில் ஏழு பிரிவுகள் உள்ளன. இதனை வெளியேற்றுவதில் முன்னர் பலதடவைகள் முயற்சித்த போதும் 48வது முயற்சியே வெற்றியளித்துள்ளது.

முற்றாக வெளியே எடுக்கப்பட்ட பிரமாண்டமான இம்மிதக்கும் துறைமுகத்தில் பொருத்தப்பட்டிருந்த பாரந்தூக்கிகளும் ஏனைகளும் இன்னும் மிகத்தெளிவாக இருக்கின்றன. இதில் இணைந்துள்ள நங்கூரத்தை ஆக்ஸ் ஹைட்ரஜன் கடவியால் தகர்க்கும் வேலையில் இப்பொழுது தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். சீனக்குடாக் கடற்கரையிலிருந்து சில தொலைவிலுள்ள உலுத்துறைமுகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த மிதக்கும் துறைமுகத்தை ஏராள மானவர்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். பிரெஞ்சு அரசாங்கத்தின் உதவியுடன் மீட்பு வேலைகள் நடைபெற்றன

## கதம்பவிழா

சாவகச்சேரி, புதன்

சாவகச்சேரி அரசினர் வித்தியாலய மாணவர் மன்ற கதம்பவிழா இம்மாதம் 20-ந் திகதி மாலை சாவகச்சேரி எம். பி. திரு. வ. நவரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## பூநகரியிலும் சிறுவர் நோய்

பூநகரி, புதன்

பூநகரிப் பகுதியில் சிறு குழந்தைகளுக்குப் பரவி வரும் வயிற்றோட்ட நோய் கண்டு பெற்றோர் மிகவும் பீதியடைந்துள்ளனர். பூநகரி ஆஸ்பத்திரியில் தாய்மார் குழந்தைகளோடு காட்சியளிக்கும் பரிதாப நிலை நாளுக்குநாள் அதிகமிக்கிறது.

அநேக பிள்ளைகள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனராம். வாந்தியும் வயிற்றோட்டமும் உண்டாகி பூநகரியைச் சேர்ந்த குழந்தையொன்று பாழ். பெரியாஸ்பத்திரியில் சவமாகியதும் குறிப்பிடத்தக்கது.

## ரூ. 2000 பிணையில் அனுமதி

வல்வெட்டித்துறை, புதன்

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவிலடியிலுள்ள செல்லையா முனி ஐயா என்பவருடைய தேநீர்க்கடையில் புத்தூரைச் சேர்ந்த காசியர் சரவணை என்பவர் இம்மாதம் 7-ந் திகதி இரவு கடையின் தட்டியை அறுத்து ரூபா 2912 பெறுமதியான தாலிக்கொடி, பென்டன், ரொக்கப்பணம் முதலியவற்றைக் களவாடிச்செல்ல முயற்சித்த போது பொலிஸாரால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டார்.

றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த எதிரியான சரவணையை மீண்டும் பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது எதிரி தான் சுற்றவாளி எனக் கூறவே மாஜிஸ்டிரேட் எதிரியை ரூபா 2000 பிணையில் செல்லுமாறும் மீண்டும் இம்மாதம் 26-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

## இந்த ஆண்டு போட்டி நடைபெறும்

உடுவில், புதன்

கடந்தவருடங்களில் நடத்தியதைப்போன்று இந்த வருடமும் சுவரொட்டி நிவாரணப் போட்டியொன்றினை நடாத்த விவசாயம் மேற்கு சுதேச நிவாரண தேசிய சங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மேற்படி சங்கம் செய்துவருகிறது.

## ஒழுங்கைகள் திருத்தப்படும்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிராமசபையில் பதினாறு வட்டாரங்களின் ஒழுங்கைகள் திருத்தத் தனித்தனி ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

மற்றும் திருவாளர்கள் எம். இ. சுப்பிரமணியம், ... இளைசமி ... [illegible] ...

## கனிஷ்ட பல்கலைக்கழகங்களுக்கு 1000 மாணவர் தெரிவு

கம்பலப்பிட்டி, புதன்

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 5 கனிஷ்ட பல்கலைக்கழகங்களிலும் பயிற்சிபெற நாடு பூராவிலுமிருந்து சுமார் 1000 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 1966ம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர பரீட்சையில் தோன்றிய மாணவர் களின் பெறுபேறுகளிலிருந்தே இவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

காலி, தெஹிவளை, கேகாலை, குளியாப்பிட்டி, பலாலி ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்படவிருக்கும் புதிய கனிஷ்ட பல்கலைக்கழகங்களில் இவர்கள் டிப்ளோமா பட்டம் பெறுவர்.

கடந்த ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையில் 4 அல்லது 3 பாடங்களில் சித்தியடைந்த 25 வயதுக்கு மேற்படாத மாணவர்களை இம் மாதம் 20ந் திகதிக்கு முன்னர் பிரவேச மத்திய ஏஜன்ஸி காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். இவர்களது பரீட்சை கட்டிலக்கங்களைத் தெரியப்படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## புத்தகம்பெற வசதிசெய்க

உடுவில், புதன்

சுன்னாகம் பட்டின சபை நூல்நிலையத்திலிருந்து அங்கத்தவர்கள் புத்தகங்களை வெளியில் எடுத்துச் சென்று படிப்பதற்கு வசதிசெய்து தருமாறு கோரும் தீர்மானம் உடுவில் இளைஞர் கழகத்தின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கழகத் தலைவர் திரு. வி. கணேசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானம் சுன்னாகம் பட்டின சபைத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

## உடுப்பிட்டி கி. ச. கூட்டம்

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டிக் கிராமசபையின் மாதாந்தக் கூட்டம் நாளை தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் உவரவு-செலவுத் திட்டம் பரிசீலனை செய்யப்படும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வியாழன் 19—9—68

(செய்திகள்: காலை 7-00, பகல், 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அல் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இன்னிசை தேனிசைகள்.

344 மீ அல் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 ... இசை.

344 மீ அல் 61 மீ

மாலை 5-00 பிறந்தநில வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 கானமஞ்சரி, 6-45 மா வளம், 7-00 கிராமசஞ்சிகை. 7-30முத்தி ... 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 பாட்டு.

## சந்தேகம் சரியாயிற்று

வல்வெட்டித்துறை, புதன்

பருத்தித்துறை-வல்வெட்டித்துறை பிரதான வீதியில் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றை பருத்தித்துறை சுங்க அதிகாரி சந்தேகத்தின் மீது தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது அந்தலொறிக்குள் 75 மூடைக்கேரளா பாக்கு, கராம்பு, சாதிக்காய் பூ முதலியன இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டதாம்.

லொறியையும் பொருட்களையும் பறிமுதல் செய்து விசாரணை நடைபெறுகிறது.

## இன்றைய பலன்

19-9-68

புரட்டாசி 3உ

வியாழக்கிழமை

திதி - துவாதசி மாலை 6-49 மேல் திரயோதசி.

நட்சத்திரம் - ஆயில்யம் இரவு 12-35 மேல் மகம்.

ராகுகாலம்- 1-33 — 3-03.

சுப நேரம் - 7-33 — 9-03.

இன்று பிறந்தவர்களுக்கு!— இவ்வாண்டு நீண்ட பயணத்துக்கு இடமுண்டு. காணி பிணக்குகளைத் தவிர்த்துக்கொள்ளவும். குடும்பத்தில் சிறு பூசல்கள் தோன்றி மறைவலாம். குழந்தை செல்வத்தின் உடல் நலம் உங்கள் கவனத்தைக் கவரலாம். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்தவும். வைத்தியர்கள் பாராட்டப்படுவார்கள். அவசர முடிவைத் தவிர்த்தால் அனைத்திலும் இன்பம் உண்டு. இறை நம்பிக்கை முன்னேற்றத்தை அளிக்கும்.

மேஷம் - கடமையில் ஆர்வம், மேலிடத்து ஆதரவு

ரிஷபம் - வரவில் உயர்வு, வாழ்த்தும் உண்டு.

மிதுனம் - தானிய நஷ்டம், தனி வழி நாட்டம்.

கடகம்- அடிசறுக்கும், குணவத்தை அடக்கு.

சிம்மம் - சொற்சிறப்பு, சொகுசான வாழ்வு.

கன்னி - தூக்கம் கெடும், துன்பம் அணைக்கும்.

துலாம் - தாய்வழிச் சுகம், தனத்துடன் வாழ்தல்.

விருச்சிகம் - அறவழி நாட்டம், தாராள மனம்.

தனுசு - ஆயுத பயம், அவசரம் வேண்டாம்.

மகரம் - வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம்.

கும்பம் - இதேபிதற்பகை, இந்தையில் குழப்பம்.

மீனம் - புண்ணிய விருப்பு, புகழுடன்வாழ்தல்.

சோதிடக்கலாநிதி

திருமதி வேலுப்பிள்ளை

## 'பயறு வாங்குவதற்கு எனக்கே இந்த நிலை....'

### உபசபாநாயகரின் அனுபவம்

யாழ்ப்பாணம், வியா.

பயறு வாங்குவதற்காக 'ஜாம் டின்' ஒன்றையும் தான் வாங்கவேண்டி ஏற்பட்ட கவலையான சம்பவத்தை உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் முன்னிலையில் அழாக்குறையாக எடுத்துக் கூறினார்.

நேற்று முன்தினம் அரசாங்கச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்திலேயே இச்சம்பவத்தை உப சபாநாயகர் விவரித்தார். யாழ்ப்பாண விற்பனை இலாகாவில், தான் பயறு வாங்கச் சென்றபோது வேறு பொருட்கள் வாங்கினால்தான் பயறு தரமுடியுமெனத் தெரிவித்ததால், தான் ஒரு 'ஜாம் டின்'னையும் வாங்கிப் பயறு வாங்கினதாக திரு. மு. சிவசிதம்பரம் இங்கு தெரிவித்தார்.

தனக்கே இவ்வாறு தெரிவிக்கப்பட்டால், சாதாரண வாழ்க்கை நடத்தும் ஏழைமக்கள் எவ்வாறு பயறு பெறமுடியுமெனக் கேட்ட திரு. சிவசிதம்பரம், இப்படியான ஒரு "ப்டாயச் சட்டம் அமுலிலிருந்தால் அது இறதா எனவும் அரசாங்க அதிபரைப் பார்த்துக் கேட்டார். இப்படியான கட்டாயங்களை உடனடியாக ரத்து செய்வதாக அரசாங்க அதிபர் இங்கு உறுதி தெரிவித்தார்.

அரசாங்கஅதிபர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நல்லூர் எம். பி. திரு. ஈ. எம். வி. நாகநாதன், கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம், தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். [கா. நி]

## 'தொழிலாளிக்கு மதிப்பு அளிப்பதைசமூகம் உணருகிறது'

உடுப்பிட்டி, புதன்

''தேவையான வசதிகளும், சந்தர்ப்பங்களும், உரிமைகளும் அளிக்கப்பட்டிருந்தால் ஹரிஜன மக்கள் மத்தியில்பேரறிஞர்கள், பெரும் வீரர்கள் நிச்சயம் தோன்றியிருப்பார்கள். இந்நாட்டின் பெருமையை அவர்கள் மேலும் உயர்த்தியிருப்பார்கள்.''

மேற்கண்டவாறு திரு. வீ. பொன்னம்பலம் அண்மையில் பல்கேரியத் தலைநகரான சோபியாவில் நடைபெற்ற உலக கம்யூனிஸ்ட் வாலிபர் மகாநாட்டில் கலந்துகொண்டு சோவியத் ரஷ்யப் பிரதேசங்களில் இருமாதகால சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டு தாயகம் திரும்பிய சாதாரண தொழிலாளியும், கம்பர்மலை கம்யூனிஸ்ட் வாலிப சங்கத் தலைவரும், உடுப்பிட்டிகிராம சபை உறுப்பினருமான திரு. இ. மார்க்கண்டுவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் பேசுகையில் கூறினார்.

கம்பர்மலை கலைவாணி சனசமூகநிலைய மண்டபத்தில் கம்பர்மலை கிராம முன்னேற்றச்சங்க தலைவர் திரு. வ. தம்பிராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

ஆசிரியர் திரு. கே. தங்கவடிவேல் பேசுகையில், ''போதனைகளை விட்டு சாதனையில் செய்திடு, ஏதமற நற்பயன் ஏற்படும்' என்று விபுலானந்த அடிகள் கூறியதுபோல் நாம் செயலில் செய்துகாட்ட வேண்டும். புத்தகங்களை வாசித்துப் பெற்ற அறிவைக்கொண்டு நிறையப் பேசலாம். ஆனால் பேச்சினால் பிரயோசனமில்லை. செயலிலேயே அனுபவ ரீதியான உணர்வுத் தெளிவு பிறக்கிறது'' என்று கூறினார்.

வடமராட்சி சனசமூக நிலையங்களின் சமாஜச் செயலாளர் திரு. சி. செல்லையா பேசும்பொழுது தாழ்த்தப்பட்டவர்கள் இன்று அதிகாரம் முன்னேறிவிட்டனர். சமூகம் ஒன்றே. ஒரு சமூகத்தைப் பிரித்துவைத்திருப்பது அறிவீனம் என்று கூறினார்.

திரு. இ. மார்க்கண்டு தமக்களிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:

தொழிலாளிக்குக் கௌரவமும், முக்கியத்துவமும் சிறப்பும் அளித்துள்ள சோவியத் நாட்டிலிருந்து திரும்பிய எனக்கு வரவேற்பளித்தது பற்றி மிகமகிழ்ச்சியடைகின்றேன். தொழிலாளிகளுக்கு மதிப்பு கொடுக்கவேண்டிய அவசியத்தைச் சமூகம் உணர்ந்து வருகின்றது. இரப்பாரும் அளிப்பாரும் இல்லாத சமூகமே உண்மையில் மேலான சமூகமாகும். ஏற்றத் தாழ்வுகளில்லாத ஒரு சமூகமுருவாக வாலிபர்கள் உழைக்க வேண்டும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'டி ஒலிவீரா அடங்கிய இங்கிலாந்து கோஷ்டியை ஏற்கமாட்டோம்'

## தெ. ஆபிரிக்கப் பிரதமர் அறிவிப்பு

### அப்படியானால் போட்டியே இல்லையென எம். ஸி. ஸி. காரியதரிசி பதில்

பிரிட்டோரியா, செப். 18 கறுப்பரான பேஸில் டி ஒலிவீராவை உள்ளடக்கிய இங்கிலாந்துக் கிரிக்கெட் கோஷ்டியைத் தமது நாடு ஏற்றுக்கொள்ள முடியாது என்று தென்னாபிரிக்கப் பிரதமர் திரு. வோஸ்டர் அறிவித்துள்ளார்.

திரு வோஸ்டரின் செய்திக்குப் பதிலளிக்கையில், இங்கிலாந்துக் கிரிக்கெட்டின் தலைமைப்பீடமான எம். ஸி ஸி.யின் காரியதரிசி, அப்படி உத்தேச இங்கிலாந்துக் கோஷ்டி ஏற்றுக்கொள்ளப்படாவிடின், அக்கோஷ்டியின் தென்னாபிரிக்கச் சுற்றுப்பிரயாணம் நடைபெறாதென்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பேஸில் டி ஒலிவீரா, உத்தேச இங்கிலாந்துக் கோஷ்டியில் சேர்க்கப்படவில்லை. ஆனால், தெரிவுசெய்யப்பட்ட விளையாட்டு வீரர்களில் ஒருவரான டொம் காட்ரைட் என்பவருக்கு ஏற்பட்ட காயம் காரணமாக, டி ஒலிவீரா அவரது இடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

இதுபற்றித் தென்னாபிரிக்கப் பிரதமர் திரு. வோஸ்டர் மேலும் குறிப்பிடுகையில், முதல் தெரிவுசெய்யப்பட்ட கோஷ்டியே உண்மையான இங்கிலாந்துக் கிரிக்கெட் கோஷ்டியென்றும், பின்னர் தெரிவுசெய்யப்பட்ட கோஷ்டிக்குப் பின்னால் இன ஒதுக்கல் கொள்கை எதிர்ப்பியக்கத்தின் கை தெரிவதாகவும் கூறினார்.

**மந்திரி கருத்து**

ஆனால், தென்னாபிரிக்கப் பிரதமரின் இந்தக் குற்றச்சாட்டை, பிரிட்டிஷ் விளையாட்டுக்களுக்குப் பொறுப்பான மந்திரி, "இது ஒரு மடமைத்தனமான கூற்று" என்று வர்ணித்துள்ளார். டி ஒலிவீரா இங்கிலாந்துக் கிரிக்கெட் கோஷ்டியில் தெரிவுசெய்யப்படுவதற்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்றார் அவர்.

**தென்னாபிரிக்க எதிர்க்கட்சித் தலைவர்**

தென்னாபிரிக்காவின் எதிர்க்கட்சியான ஐக்கியக் கட்சியின் தலைவர், தென்னாபிரிக்கப் பிரதமரின் நிலையைக் கண்டித்துள்ளார். இத்தகைய நிலையைத் தென்னாபிரிக்கா கடைப்பிடிப்பதால், பிரிட்டனுடன் மட்டுமன்றி, மற்றும் கிரிக்கெட் விளையாடும் சகல நாடுகளுடனும் தென்னாபிரிக்காவின் உறவுகள் மோசமடைந்துவிடுமென்று அவர் எச்சரித்தார்.

**டி ஒலிவீரா கவலை**

இவ்வளவு பிரச்னைக்கும் காரணமாக விளங்கும் பேஸில் டி ஒலிவீரா, 'எனது சொந்தத் துரதிர்ஷ்டம் கிரிக்கெட் உலகின் துரதிர்ஷ்டமாகிவிட்டதே எனக் கவலைப்படுகிறேன்' என்று கூறியுள்ளார். திரு. வோஸ்டர் மனம்வைத்தால், தன்னையும் உள்ளடக்கிய இங்கிலாந்துக் கிரிக்கெட் கோஷ்டியைத் தென்னாபிரிக்காவினுள் அனுமதிக்க ஒரு வழி காண்பது கஷ்டமாகவிருக்காது எனத் தாம் நம்புவதாகவும் அவர் கூறினார்.

## குதிரை மார்க் வாளிகள்



குதிரை மார்க் கல்வனைஸ்ட் வாளிகளை வாங்கி உபயோகிக்கிறீர்களா?
இன்றே வாங்குங்கள்

குதிரை மார்க் வாளிகள் தரத்தில் உயர்ந்த இரும்புத் தகடுகளினால் செய்யப்பட்டவை. எங்கள் தொழிற்சாலையில் மட்டும் கல்வெனைஸ் முறைப்படி விசேஷமாகத் தயாரிக்கப்படுவன. உங்களுக்கு வேண்டிய எல்லாவித அளவுகளிலும் கிடைக்கும்

இலங்கை • குதிரை மார்க் • HORSE BRAND

தயாரிப்பாளர்கள்:-
தலைமைக் காரியாலயம்:- எல்பிஹெம்ஹவுஸ்
கொழும்பு.

தொழிற்சாலை:- எல்பிஹெம் ஹவுஸ்
மாவிட்டபுரம்.

வடமாகாண விநியோகஸ்தர்கள்:-
தனலக்குமி ஸ்ரோர்ஸ்
தெல்லிப்பழை.

ஏனைய பகுதிகளின் ஏகவிநியோகஸ்தர்:
லிங்கன் ட்ரேடர்ஸ்
செல். ஜோன்ஸ் வீதி, கொழும்பு 11.

## 6 மாத சிறை சைக்கிள் திருடினராம்

அச்சுவேலி, புதன்

நயினாதீவைச் சேர்ந்த செல்லப்பா குலசேகரம் என்பவர் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த பி. பழனிச்சாமி என்பவருக்குச் சொந்தமான சைக்கிள் வண்டியொன்றை களவாடிய குற்றத்திற்காக யாழ்ப்பாணம் நீதவான் ஜனாப் எம். ஜமீல் ஆறு மாதச் சிறைத்தண்டனையும் இரண்டு வருட பொலிஸ் கண்காணிப்பும் விதித்து தீர்ப்பளித்தார்.

## நவராத்திரி

அராலி, புதன்

அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இம்மாதம் 23ந் திகதி நவராத்திரி கும்பபூசை ஆரம்பமாகி அக்டோபர் முதலாந்திகதி மானம்பூ நடைபெறவிருக்கும் சுவாமி ஊர்வலம், கன்னிவாழை வெட்டுதல் ...

## சேர். பொன் இராமநாதன் தங்கபதக்கம் சுந்தரலிங்கத்துக்கு

கொழும்பு, புதன்

இலங்கைச் சட்டக்கல்லூரித் தமிழ் மன்றத்தினரால் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் திரு. சிவசம்பு சுந்தரலிங்கம் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டு சேர். பொன்னம்பலம் இராமநாதன் தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.

சட்டக்கல்லூரியிலுள்ள மாணவர் சங்கத்தின் தலைவராகவும் சட்டக்கல்லூரி கிரிக்கெட் குழுத் தலைவராகவும் உள்ள இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் சரவெட்டி மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற உதவிப் பொலிஸ் அதிகாரி திரு. பொ. சிவசம்புவின் புதல்வராவர்.

## 7 பேருக்கு அபராதம்

சாவகச்சேரி, புதன்

டிராக்டரில் ஆள் ஏற்றியதாகவும், அதிக பொருள் ஏற்றியதாகவும், லைசென்ஸ் இல்லாததற்காகவும் இன்னும் பல சட்ட விரோத காரியங்களுக்காகவும் தொடரப்பட்ட வழக்குகளில் சாவகச்சேரிக் கோர்ட்டில் பலருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

கே. பெரியசாமி என்பவர் டிராக்டரில் அளவுக்கு அதிகமாக வைக்கோல் ஏற்றிய தற்கான குற்றச்சாட்டில் எதிரிக்கு 50/- ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. லைசென்ஸ் இல்லாது டிராக்டரை ஓட்டியதாகவும் வைக்கோல் ஏற்றியதாகவும் தொடரப்பட்ட இன்னொரு வழக்கில் பி. வேரம்பலம் என்பவருக்கு 40/- ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

எஸ். அருணாசலம் என்பவர் டிராக்டர் இன்ஸூரன்ஸ் லைசென்ஸ் இன்றியும் டிராக்டரில் இடுகு ஏற்றியும் சென்ற குற்றத்திற்காக 50/- ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

ஆர். கணபதிப்பிள்ளை என்பவர் டிராக்டர் மட்காட்டில் பிரயாணம் செய்தமைக்கு 10/- ரூபா அபராதம் விதிக்கப்பட்டார். அதே குற்றத்திற்காக வி. நவரத்தினம் என்பவருக்கும் 10/- ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கே. குமாரசாமி என்பவர் டிராக்டர் பெட்டியில் ஆள் ஏற்றிய குற்றத்திற்கு 10/- ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

எம். சிற்றம்பலம் டிராக்டர் பெட்டியில் பிரயாணஞ் செய்த குற்றத்திற்காக 10/- ரூபா அபராதம் செலுத்தினார்.

## உயர் வகுப்பு பற்றி ஆராய்வர்

உருத்திரபுரம், புதன்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம் இம்மாதம் 30-ம் திகதி மாலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். கல்லூரி அதிபர் திரு. செ. சிவகுருநாதபிள்ளை தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கனிஷ்ட பொதுத் தராதர உயர்தர வகுப்புகள் நடத்துவது பற்றி ஆராயப்படவிருக்கிறது.

## புதிய உறுப்பினர்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம், நெடியகாடு பிள்ளையார் கோவில் முருகன் வாசிகசாலையில் கழகத் தலைவர் திரு. க. செ. சின்னரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புது வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: க. செ. சின்னரத்தினம், உப-தலைவர்: இரா. துரைரத்தினம், காரியதரிசி: த. சி. கணேசமூர்த்தி, உப-காரியதரிசி: எஸ். எல்ஸ். குலநாயகம், தனாதிகாரி: வி. பரமானந்தவேல். ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது. கழகத்தின் போஷகராக திரு. ஏ. எஸ். சோமகுரு ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஸ்ரோர் கீப்பருக்கு

## வேலையும் நஷ்ட ஈடும்

முல்லைத்தீவு, புதன்

எதுவித காரணமுமின்றி ஸ்ரோர் கீப்பர் ஒருவரை வேலையிலிருந்து நீக்கியதாகத் தொடரப்பட்ட வழக்கில் 2 வருட முழுச்சம்பளத்தையும், திரும்ப வேலையையும் கொடுக்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

வன்னி தெற்கு தமிழ்ப் பிரிவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஸ்ரோர் கீப்பராகக் கடமையாற்றிய யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியைச் சேர்ந்த வி. எஸ். சுப்பிரமணியம் என்பவர் 1966-ம் ஆண்டு தம்மை எதுவித காரணமுமின்றி வேலை நீக்கஞ்செய்ததாகவும், வேலைநீக்கஞ்செய்யப்பட்ட காலத்திற்கு சம்பளமும், மீண்டும் வேலையும் வழங்குமாறு கொழும்பு தொழில் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

விசாரணை செய்த நீதிபதி திரு. ஆர். சுப்பிரமணியத்திற்கு இரண்டு வருடத்திற்கும் மாதம் 260 ரூபா வீதம் 6240 ரூபா வழங்குமாறும், மீண்டும் வேலையைக் கொடுக்குமாறும் தீர்ப்பளித்தார்.

## முன்னேற்றம் காணாத நாரந்தனை

ஊர்காவற்றுறை, புதன்

நாரந்தனை சரவணை இளைஞர் முன்னேற்றக்கழக வருடாந்தக்கூட்டம் சென்றவாரம் நடைபெற்றபோது நாரந்தனைக் கிராமசபைக்கும், வேலணைக் கிராமசபைக்குமாக பிரிக்கப்பட்டு எதுவித முன்னேற்றமும் காணாத நிலையிலுள்ள சரவணைக் கிராமத்தை தனித்த ஒரு கிராமசபையாக்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஆதரவு கொடுப்பதெனவும், பலவருடங்களுக்கு மேலாக புயலினால் சேதமடைந்து இடிக்கும், சரவணை ரோமன் கத்தோலிக்க பாடசாலையை விரைவில் கட்டிமுடிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோருவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

